# THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

## M.C.O.P.No.4/2019

Deposition of RW.1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 26.04.2023.

**Evidence Recorded Time: 12.21 P.M. to 12.30 P.M**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **கணேசன்** | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை**:–

நான் மேல்கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன். விபத்து சமயத்தில் TN 30 BD 7337 மாருதி வேனை நான் ஓட்டி சென்றேன் என்றால் சரிதான். நான் விபத்தின் போது ரோட்டின் இடது புறம் மெதுவாக ஓட்டி சென்றேன். எதிரில் வந்த வாகனம் செண்டர் போர்டில் மோதி விபத்தை ஏற்படுத்தினார். இந்த விபத்திற்கு எதிரே வந்த வாகனம் தான் காரணம்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

விபத்து நடந்தது எந்த இடம் என்றால் மேச்சேரி தாண்டி விபத்து நடந்தது, எந்த இடம் என்று சரியாக நினைவில்லை. விபத்திற்கு என் மீதுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அதற்கு நான் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதத்தை செலுத்தியுள்ளேன். நான் விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் ரோட்டின் நடுவில் எந்த கோடும் வரையவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல ரோட்டின் நடுவில் எந்த ஒரு செண்டர் கோடு இல்லை என்றாலும், நான் தான் விபத்திற்கு காரணம் என்றாலும் விபத்து நடந்ததை ஒப்புக்கொண்டு அதற்கு அபராதம் செலுத்திவிட்டு அதற்கு முரணமாக சாட்சியம் அளிக்க முடியாது என்றாலும் சரியல்ல.

என் மீது தவறு இல்லை மனுதாரர் மீதுதான் தவறு என்று சொல்லி இன்றுவரை எந்த சட்டநடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற வாகனத்தின் உரிமையாளர் சேலத்தை சேர்ந்த மனோகர் என்பவர் ஆவார். விபத்திற்கு பின்னிட்டு நான் அவரிடம் வேலை செய்வது இல்லை. நான் விபத்தினை ஏற்படுத்தியதால் தான் மனோகரன் என்னை வேலையை விட்டு நீக்கினார் என்றால் சரிதான். என் மீது தவறு உள்ளது என்றாலும் நான் மனுதாரர் மீதுதான் தவறு உள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை.

ஒம்/–RW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.